

ALPHA MIND POWER™

"Power of the Subconscious Mind"

Newsletter

# FEBRUARY 2014

My Dear Alpha Siddha,

My love and blessings to you.

We began this year with a wonderful Homam. It was indeed very good. Many Alpha Siddhas had gathered from various cities and each and everyone experienced the purification and the energy of the Homam. It was a real blessing to be there. I was very happy to see so many Alpha Siddhas together.

Now, let us continue our discussion about the various factors that stop us from manifesting our goals. In this issue we will see how self pity can prevent us from manifesting our goals. Let us look at an example from recent Agni Kundam class.

We were doing a meditation to identify the reason that prevented us from enjoying good health. After the meditation many Alpha Siddhas shared their experiences. This is the experience of one Alpha Siddha.

She had been falling sick very frequently in the last few months. She could not understand the reason as she was a person who was always healthy. She valued good health a lot. She always tried to help anyone when they fell sick. She took it upon herself to take time to go and help them. She had helped many of her relatives and friends when they were sick. This was a habit with her all along. But now, why was she falling sick so often? During the meditation, she asked for the reason. And it was revealed to her.

After helping many people to get well, a few months back, she suddenly had a thought. she had helped so many people when they were sick. But, what if she fell sick? Will anyone take time off to help her? This question kept coming up in her mind again and again. She wanted to know the answer!

Now, during the meditation, this thought popped up in her mind and suddenly it was all very clear. It was the self pity in her mind that was bringing on all the sickness. She wanted to experience people pitying her. And that is what she was experiencing! She had always wanted to maintain good health. But, now this thought in her mind was not letting her be healthy at all. Once she realized it, she was also able to release that thought from her mind. Now, she was very clear that nothing was worth falling sick. She wanted to be hale and healthy as she had always been. She was determined to change her thought forms and once again get back to her best health.

That is the power of our thought form! Remember, **self pity is like quick sand. Nothing can be built on it**. On the other hand, the determination to succeed is like a strong base. You can build anything on it.

We will next see how fear of manifestation itself can prevent us from manifesting a goal!

Wishing you wonderful meditations and great manifestations!

Blessings,
Dr. Viji Panthaiyan

அன்புள்ள ஆல்ஃபா சித்தரே,

அன்புடனும் ஆசீர்வாதங்களுடனும் எழுதுகிறேன்.

இவ்வருடத்தை ஒரு மிக சிறப்பான யாகத்துடன் துவக்கினோம். அற்புதமான அனுபவம்! பல ஊர்களிலிருந்து ஆல்ஃபா சித்தர்கள் பலர் கலந்து கொண்டது ஒரு தனி சிறப்பு! ஒவ்வொருவரும் யாகத்தின் புனிதத்தையும் சக்தியையும் உணர்ந்தார்கள். அன்று அந்த இடத்தில் இருப்பதே ஒரு பாக்கியமாக இருந்தது. அத்தனை ஆல்ஃபா சித்தர்களை ஒரு இடத்தில் பார்த்தது உண்மையிலேயே எனக்கு பெருமகிழ்ச்சி அளித்தது.

இப்பொழுது நமது இலட்சியங்களை அடைய விடாமல் தடுக்கும் விஷயங்கள் என்ன என்ற விவாதத்தை தொடர்வோம். இந்த இதழில் தன்னிரக்கம் எப்படி நமது இலட்சியங்களை தடுக்கும் என பார்ப்போம். சமீபத்தில் நமது அக்னிகுண்டம் வகுப்பில் கண்ட ஒரு அனுபவம் இது.

நம்மை சிறப்பான ஆரோக்கியத்தை அனுபவிக்க விடாமல் தடுப்பது என்ன என்று அறிய தியானம் செய்தோம். தியானம் முடிந்த பின் பலர் தங்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள். ஒரு ஆல்ஃபா சித்தரின் அனுபவம் இது.

கடந்த சில மாதங்களாக அவருக்கு அடிக்கடி உடல் நலக் குறைவு ஏற்பட்டு வந்தது. எப்பொழும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர் என்பதால் அதன் காரணம் அவருக்கு புரியவில்லை. உடல் ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது என்று கருதினார் அவர். யாருக்காவது உடல் நலம் சரியில்லை என்றால் முதலில் சென்று உதவுவது இவராகத்தான் இருக்கும். பல உறவினர்கள் மற்றும் நண்பர்கள் நோய் வாய் பட்ட பொழுது இவர் நேரில் சென்று பார்த்து உதவியிருக்கிறார். ஆனால் இப்பொழுது இவருக்கு இப்படி உடல் நலமில்லாமல் போகும் காரணம் என்ன? தியானத்தில் இந்த கேள்வியை கேட்டார். விடையும் அவருக்கு தெளிவாக கிடைத்தது.
பலர் குணமடைய உதவி வந்த நேரத்தில் சில மாதங்களுக்கு முன் இவர் மனதில் ஒரு கேள்வி எழுந்தது. நாம் இத்தனை பேருக்கு உதவுகிறோம். என்றேனும் தனக்கு உடல் நலமில்லாமல் போனால் மற்றவர்கள் இது போல் தங்களது நேரத்தை செலவிட்டு உதவ முன் வருவார்களா? திரும்ப திரும்ப இந்த கேள்வி அவர் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தது. இந்த கேள்விக்கு பதிலை அவர் மனம் தேடிக் கொண்டே இருந்தது.

இப்பொழுது தியானத்தில் இதே கேள்வி அவர் மனதில் எழுந்தது. அதற்கு விடையும் கிடைத்து விட்டது. அவர் மனதிலிருந்த தன்னிரக்கம் தான் காரணம் என்பது புரிந்தது. அதுவே அவரது உடல் நலம் குன்ற காரணமாக இருந்தது. மற்றவர்களது இரக்கத்தை உணர விரும்பியது அவர் மனம். அதன் காரணமாகத்தான் அவரது உடல் நலம் பாதிகப்பட்டது. காரணத்தை உணர்ந்தும் தன் மனதிலிருந்து அதை நீக்கி விட்டார்.

இப்பொழுது அவர் மனதில் ஒரு தெளிவு இருந்தது. எந்த காரணத்திற்காகவும் உடல் நலத்தை இழக்க கூடாது என்பதில் தெளிவாக இருந்தார். எப்பொழுதும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதே சிறப்பு என்ற முடிவுக்கு வந்தார். அதற்கு தகுந்த படி தனது எண்ணங்களை மாற்றிக் கொண்டார்.

நமது எண்ணங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை பார்த்தீர்களா? நினைவில் கொள்ளுங்கள், **தன்னிரக்கம் என்பது புதை மணல் போன்றது. அதன் மீது எதையும் நிர்மாணிக்க முடியாது.** அதே சமயம், வெற்றி பெற வேண்டும் என்ற வைராக்கியம் ஒரு நல்ல ஆதாரம் போன்றது. அதன் மீது எதையும் கட்ட முடியும் .

அடுத்த இதழில் இலட்சியம் நிறைவேறுவதில் உள்ள பயமே அந்த இலட்சியத்தை எப்படி தடுக்கும் என்பதை பார்ப்போம்.

உங்கள் தியானங்கள் சிறப்பாக அமையவும் இலட்சியங்கள் எளிதில் நிறைவேறவும் எனது ஆசீர்வாதங்கள்.

ஆசீர்வாதங்களுடன்,
Dr. விஜி பந்தையன்

# NEW YEAR HOMAM 2014 - PHOTOS







***Join us on a Yatra to Rishikesh with our Guruji!***

*Date: 30.04.2014 to 04.05.2014*

*For Further details contact Alpha Mind Power Office*










ஆல்ஃபா மைண்ட் பவர்
ALPHA MIND POWER
புத்தாண்டு விழா









